# <u>வாக்குமூலம்</u>
## <u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
## <u>வழக்கு எண் : SC.No. 16/2025</u>
## <u>வழக்கு சாட்சி PW-1</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜேஷ் | தாலுகா | : | கடையநல்லூர் |
| தந்தை பெயர் | : | ரவி | தொழில் | : | ஜே.சி.பி ஓட்டுநர் |
| கிராமம் | : | கம்பனேரி | வயது | : | 24 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 21th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் கம்பனேரியில் குடியிருந்து வருகிறேன். நான் ஜே.சி.பி ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது தாய்மாமா. சாட்சி ரவி என்னுடைய அப்பா. என்னுடைய அப்பா இறந்து விட்டார். புது பஸ்ஸ்டாண்ட் ரிலையன்ஸ் மால் அருகே ஜே.சி.பி வைத்து தொழில் பார்த்து கொண்டிருந்தோம். எதிரியும் ஜே.சி.பி வைத்து தொழில் பார்த்து கொண்டிருந்தார். 30.03.2022 அன்று எனக்கு ஒரு ஆபர் வந்தது. நான் ஜே.சி.பியை அனுப்பி வைத்தேன். எதிரி என்னிடம் புது பஸ்ஸ்டாண்ட் ரிலையன்ஸ் மால் அருகேயுள்ள பெட்ரோல் பல்க் அருகில் வைத்து எதிரி என்னிடம் சண்டைக்கு காலை 08.00 மணிக்கு வந்தார். தேவடியா பயல்களே என்னுடைய பிழைப்பை கெடுக்கிறியே என்று சொன்னார். நான் சண்டை போடக்கூடாது என்று தூரே போய் நின்றேன். அன்றைய தினம் சாயுங்காலம் 06.00 மணியளவில் எதிரி மீண்டும் பெட்ரோல் பல்க் அருகே வைத்து என்னை கீழே தள்ளி கத்தியால் இடது பக்க மூக்கிலும், இடது பக்க நெஞ்சிலும் வெட்டினார். என்னுடைய அப்பா

வந்து பிடிக்க வந்தார். அப்போது, எதிரி நீயும் சாவுல என்று கூறி என்னுடைய அப்பாவை கத்தியால் வயிற்றிலும், வாயிலும் குத்தி "இத்தோடு செத்து தொலை" என்று கூறினார். பக்கத்திலிருந்து விஜயகுமார், மகேஷ், ஆயிலப்பேரியை சேர்ந்த சிவா ஆகியோர்கள் வந்து "ஏன் இவ்வாறு குத்துகிறாய்" என்று கேட்டார்கள். உடனே, என் அப்பா மீது ஏறியிருந்து குத்தி கொண்டிருந்த எதிரி எழும்பி நின்றார். ஆட்கள் வந்ததை பார்த்ததும் என் கையால் தான் சாவு என்று சொல்லிக் கொண்டு அவர் வந்திருந்த பைக்கையும், அவருடைய செருப்பையும் போட்டு விட்டு வடக்கு பார்த்து சென்றார். பின்னர், ரோட்டில் சென்ற ஆட்டோவை மறித்து என்னையும், அப்பாவையும் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நாங்கள் தென்காசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தோம். அங்கு தென்காசி காவல் நிலைய காவலர்கள் வந்து எங்களை விசாரித்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் என்னுடைய அப்பா கொடுத்தது தான். அதிலுள்ள கையெழுத்து என்னுடைய அப்பாவினுடையது தான். அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆகும். எங்களை மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு சுமார் ஒரு மாதம் சிகிச்சை எடுத்துக்கொண்டோம். என்னிடம் காண்பிக்கப்படும் கத்தியால் தான் எதிரி என்னையும், அப்பாவையும் குத்தினார். அந்த கத்தி **சா.பொ.1** ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் செருப்புகளை ஆஜர் எதிரி சம்பவயிடத்தில் போட்டு விட்டு சென்றார். அந்த ஒரு ஜோடி செருப்புகள் – **சா.பொ.2** ஆகும். எதிரி சம்பவயிடத்தில் விட்டுச் சென்ற பைக் ஹோண்டா சைன் பைக் ஆகும். அந்த நம்பர் எனக்கு தெரியாது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** – இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.07.21 18:40:37 +0530